Ontario

# 2009

# ஒன்றாறியோ வரவுசெலவுத் திட்டம்

## சவாலை எதிர்கொள்ளல்

*எமது பொருளாதார எதிர்காலத்தைக் கட்டியெழுப்புதல்*

*முக்கிய அம்சங்கள்*

ஒன்றாறியோ, ஒரு பூகோளப் பொருளாதார நெருக்கடிக்குள் அகப்பட்டுள்ளது. கடினமான இக்காலகட்டத்தை கடப்பதற்கும் எதிர்காலத்துக்கான ஒரு வலுவான ஒன்றாறியோவைக் கட்டியெழுப்புவதற்கும் எமது மக்களுக்கு உதவும் வகையில் எம்மாலான அனைத்தையும் ஒன்றுபட்டு நாம் செய்தல் வேண்டும்.

2009 வரவுசெலவுத் திட்டம், பொருளாதாரப் புயலை ஒன்றாறியோவிலுள்ள குடும்பங்கள் சமாளிப்பதற்கு உதவுகிறது. ஆனால் அதற்கு மேலாகவும் அது உதவுகிறது. செல்வம் மீண்டும் கொழிக்கின்றபோது குடும்பங்களும் வியாபாரங்களும் பயனுறும் வகையில் இந்த வரவுசெலவுத் திட்டம் ஒன்றாறியோவின் பொருளாதாரத்தை வலுவானதாகவும் மேலும் சிறப்புள்ளதாகவும் ஆக்கியமைக்கும்.

## இன்றைய பணிகள்

வேலை வாய்ப்புக்களை உருவாக்குவதற்கெனவும், ஒன்றாறியோ பணியாட்கள் வெற்றியடைவதற்கு வேண்டிய திறன்களைப் பெறுவதற்கெனவும் கட்டமைப்பிலும் திறன் பயிற்சியிலும் இந்த வரவுசெலவுத் திட்டம் முதலீடு செய்கின்றது.
நாம்:

- எமது குடும்பங்களும் - எமது பொருளாதாரமும் தங்கியுள்ள மருத்துவமனைகள், றோட்டுக்கள், சமூகவுதவி இல்லங்கள், பாடசாலைகள் என்பவற்றை முன்னேற்றுவதற்கென 32.5 பில்லியன் டொலரை ஒதுக்குகிறோம். இந்த இரண்டு வருட முதலீடு 300,000க்கும் அதிகமான வேலை வாய்ப்புக்களை உருவாக்கி ஆதரவளிக்கும்
- வேலையிழந்திருப்போர் உட்பட, பல்லாயிரக் கணக்கான ஒன்றாறியோ வாசிகளுக்கு புதிய ஆதரவில் 700 மில்லியன் டொலரூடாக, புதிய திறன்கள் மற்றும் கல்வியறிவு வாய்ப்புக்களை வழங்குகிறோம்.
- கனடாவிலேயே மிகத் தாராளமான ஒன்றாறியோவின் தொழிற் பயிற்சியாளர் வரிக்கொடுப்பனவை வழங்குவதற்குப் பிரேரிப்பதன் மூலம், இளம் ஒன்றாறியோ வாசிகளுக்கு புதிய வாய்ப்புக்களை வழங்குகிறோம். அத்துடன் 100,000 மாணவர்கள் இவ்வாண்டு கோடைகால வேலை வாய்ப்பைப் பெறவும் உதவுகிறோம்.
- அடுத்த மூன்று வருடங்களில் 130 மில்லியன் டொலரை ஒதுக்கி, விவசாயம், வன உற்பத்திகள், சுரங்கக் கைத்தொழில் துறைகளிலுள்ள வியாபாரங்களுக்கும் பணியாட்களுக்கும் ஆதரவளிக்கின்றோம்.

## சிறுவர்களிலும் குடும்பங்களிலும் முதலீடு செய்தல்

பொருளாதார சவால் மிக்க இன்றைய காலகட்டங்களில், மிகவும் பாதிப்புக்குள்ளாகக் கூடிய ஒன்றாறியோ வாசிகளுக்கு இந்த வரவுசெலவுத் திட்டம் ஆதரவளிக்கிறது. நாம்:

- இந்த ஆடி மாதம் தொடக்கம் ஒரு குழந்தைக்கான ஒரு வருடகால ஒன்றாறியோ சிறுவர் உதவிப் பணத்தை 600 டொலரிலிருந்து 1,100 டொலராக, ஏறக் குறைய இருமடங்காக உயர்த்துவதன் மூலம் குறைந்த மற்றும் நடுத்தர வருமானக் குடும்பங்களுக்கு உதவுகின்றோம்
- 2008 வரவுசெலவுத் திட்டத்தில் அறிவித்தமைக்கிணங்க, முதியோர் இல்ல உரிமையாளர்களின் சொத்துவரிக் கொடுப்பனவை இருமடங்காக்குகிறோம். இதன் மூலம் தமது சொந்த இல்லங்களில் வாழும் குறைந்த மற்றும் நடுத்தர வருமானமுள்ள முதியோர், தமது சொத்து வரிக்கு உதவியாக 500 டொலரைப் பெறுவர். இது அடுத்த ஐந்து ஆண்டுகளில் 600,00க்கும் அதிகமான முதியோருக்கு உதவும்
- அடுத்துவரும் இரண்டு ஆண்டுகளில் இயலுமான விலையுள்ள வீட்டு அலகுகளை நிர்மாணிக்கவும் புதுப்பிக்கவும் என 1.2 பில்லியன் டொலரை முதலீடு செய்வதற்கென மத்திய அரசுடன் செயற்படுகின்றோம்
- Ontario Works மற்றும் Ontario Disability Support Program உதவித் தொகைகளை அதிகரிக்கின்றோம்
- உள்ளூராட்சி வாடகை வங்கிகளுக்கு 5 மில்லியன் டொலருக்கும் அதிகமான தொகையை வழங்குவதனூடாக, குறைந்த வருமானமுள்ள குடியிருப்பாளர்கள் வெளியேற்றப்படுதலைத் தடுக்க உதவுகின்றோம்.



www.ontario.ca/budget

## மேலும் 2009 ஒன்றாறியோ வரவுசெலவுத் திட்டத் தகவல்கள்

2009 ஒன்றாறியோ வரவுசெலவுத் திட்டம் தொடர்பான பொது விசாரணைகளுக்கு:

நிதியமைச்சு தகவல் நிலையம்

கட்டணமற்ற ஆங்கில, பிரெஞ்சு தொலைபேசி:
விசாரணைகள்: 1-800-337 7222
கேட்டல் குறைபாடு: 1-800-263 7776

இந்த ஆவணத்தின் மின் பிரதிக்கு எமது இணையத் தளத்துக்குச் செல்க: www.ontario.ca/budget

அச்சிடப்பட்ட இலவசப் பிரதிகள் கிடைக்குமிடம்:

ServiceOntario Centre
College Park Building
777 Bay Street, Market Level,
Toronto, Ontario
M5G 2C8

| | |
|---|---|
| தொலைபேசி: | 416-326-5300 |
| கேட்டற் குறைபாடு: | 416-325-3408 |
| கட்டணமற்றது: | 1-800-668-9938 |
| கேட்டற் குறைபாடு: | 1-800-268-7095 |
| இணையத்தளம்: | |

www.serviceontario.ca/publications

Tamil

## நாளைய பணிகள்

வேலைவாய்ப்பு உருவாக்கத்திற்கு வழிவகுக்கக்கூடிய வகையிலும், மீண்டும் செல்வம் கொழிக்கின்றபோது ஒன்ராறியோ குடும்பங்களும் வியாபாரங்களும் பயனடைவதை உறுதி செய்யும் வகையிலும், ஒன்ராறியோவின் பொருளாதாரத்தை மக்கின்ரி அரசாங்கம் மேலும் சிறப்பாக்குகின்றது.

பின்வருவனவற்றினூடாக பசுமைப் பொருளாதாரத்தில் புதிய வாய்ப்புக்களை விருத்திசெய்ய நாம் உதவகின்றோம்:

- ஒரு பதிய Emerging Technologies Fundஇல் 250 மில்லியன் டொலரை முதலீடு செய்தல்
- அடுத்த ஐந்து ஆண்டுகளில் திறமை மிக்க மின்சார விநியோக அமைப்பொன்றின் உருவாக்கத்தை ஊக்குவிப்பதற்கென 50 மில்லியன் டொலரை வழங்குதல்
- உருவாகிவரும் பசுமைச் சக்தித் துறையில் புதிய வாய்ப்புக்களைக் கைப்பற்றிக் கொள்ளத் தேவையான திறன்களை ஒன்ராறியோ வாசிகள் கொண்டிருக்கும் வகையில், ஒரு புதிய 5 மில்லியன் டொலர் Green Jobs Skills Strategyயை உருவாக்குதல்.

புதியன கண்டுபிடித்தலில் நாம் பின்வரும் வழிகளில் முதலீடு செய்கிறோம்:

- உயிரியல் மருத்துவ ஆய்வுகளுக்கென 100 மில்லியன் டொலரை வழங்குதல்
- Innovation Demonstration Fundக்கான 50 மில்லியன் டொலர் ஊடாக, ஒன்ராறியோவின் சிந்தனைகளை ஒன்ராறியோவின் வேலைவாய்ப்புக்களாக மாற்ற உதவுதல்
- அடுத்து வரும் ஆறு வருடங்களுக்கு 300 மில்லியன் டொலர் ஊடாக மிக அவசரமாகத் தேவைப்படும் ஆய்வுக் கட்டமைப்பபைக் கட்டியெழுப்பதல்.

பல நூறாயிரம் ஒன்ராறியோ வாசிகளை ஒன்ராறியோவின் கேளிக்கை மற்றும் கலையாக்கத் துறைகள் வேலைக்கமர்த்தியுள்ளன. இதனால்தான் இத்துறைகளுக்கு நாம் ஏறக்குறைய ஆண்டொன்றுக்கு 100 மில்லியன் டொலரை, பிரேரிக்கப்பட்ட வரி உதவியாகவும், 30 மில்லியன் டொலரை மேலதிக உதவியாகவும் வழங்குகின்றோம்.

## அகல்விரவான வரிச் சீர்திருத்தப் பொதி

ஜூலை 01, 2010இல் ஒரு தனி, பெறுமதிசேர் விற்பனை வரியை நோக்கிய அகல்விரிவான வரிச் சீர்திருத்தப் பொதியொன்றினை ஒன்ராறியோ பிரேரிக்கின்றது. அத்துடன் பொதுமக்களுக்கும் வியாபாரங்களுக்கும் என வரி உதவியை வழங்குகிறது.

குடும்பங்கள் சரிக்கட்டிக்கொள்ள உதவுவதற்கென நாம் பின்வருவனவற்றைச் செயற்படுத்துவோம்:

- புத்தகங்கள், சிறுவர்களின் உடைகள், காலணிகள், டயப்பேர்ஸ், கார் ஆசனங்கள், பாலகர்களின் கார் ஆசனங்கள், பெண்பாலாரது சுகாதாரப் பாவனைப் பொருட்கள் ஆகியவற்றிற்கு வரியின் எட்டு சதவீத, மாகாண பாகத்திலிருந்து விலக்களித்தல்
- புதிதாக நிர்மாணிக்கப்பட்ட 400,000 டொலருக்குக் குறைந்த வீடுகள், மேலதிக வரிச் சுமைக்கு உள்ளாக்கப்படாதிருத்தல் மற்றும் 400,000 – 500,000 டொலர் பெறுமதிகளுக்கிடைப்பட்ட புதிய வீடுகளை வாங்குவோர் ஒரு விகிதாசார மீள் கொடுப்பனவைக் கோருதல் என்பவற்றை உறுதி செய்தல்.

மக்களும் குடும்பங்களும் புதிய தனி விற்பனை வரிக்கு தம்மை சரிக்கட்டிக்கொள்ள உதவுவதற்கென அரசாங்கம் நிரந்தர வரியுதவி மற்றும் நேரடிப் பணம் செலுத்துகை ஆகியவற்றை வழங்கும்:

- ஒன்ராறியோ வரிசெலுத்துவோரில் 93 சதவீதத்தினர் குறைந்த தனியாள் வருமான வரியைச் செலுத்துவர்
- 160,000 டொலருக்கும் குறைவான வருமானத்தைக் கொண்ட, தகுதிபெற்ற குடும்பத்தினர், மாகாண அரசிடமிருந்து மொத்தம் 1,000 டொலரை மூன்று கொடுப்பனவுகளில் பெறுவர்
- 80,000 டொலருக்கும் குறைவான வருமானத்தைக் கொண்ட, தகுதி பெற்ற தனிநபர்கள், மொத்தம் 300 டொலரை மூன்று கொடுப்பனவுகளில் பெறுவர்
    - முதற் கொடுப்பனவு ஜூன் 2010இலும் இரண்டாவது டிசெம்பர் 2010இலும் மூன்றாவது ஜூன் 2011இலும் வந்துசேரும்
- மாகாண அரசு பின்வருவனவற்றையும் வழங்கும்:
    - கனடாவின் மிகக் கூடுதலான தாராள தன்மை மிக்க நிதி மீளளிப்பு விற்பனை வரிக் கொடுப்பனவினூடாக குறைந்த மற்றும் நடுத்தர வருமானமுள்ள மக்களுக்கு நிரந்தர வரியுதவி. இந்தப் புதிய வரியளிப்பு ஒவ்வொரு வயதுவந்தோருக்கும் குழந்தைக்கும் வருடாந்தம் 260 டொலர்வரை வழங்கும்
    - சகல ஒன்ராறியோ வாசிகளும் உழைத்த, வரிசெலுத்தவேண்டிய வருமானத்தின் முதல் 36,848 டொலரில், ஒரு 16.5 சதவீத வரிவீதக் குறைப்பு

வியாபரரங்கள் மேலும் சிறப்படைய உதவும் பொருட்டு, விசேடமாக சிறுவியாபாரங்களுக்கு அரசாங்கம் வரிக் குறைப்பை வழங்கும். இவ்வரிக் குறைப்பானது அதிக வேலை வாய்ப்புக்களுக்கும், ஒரு வலுவான, மேலும் சிறப்பான பொருளாதாரத்திற்கும் வழிவகுக்கும். ஜூலை 1, 2010 தொடக்கம், நாம் பின்வருவனவற்றை செயற்படுத்துவோம்:

- சிறு வியாபாரங்களுக்கான தாபன வருமான வரியை (Corporate Income Tax - CIT) 18 சதவீதத்தால் குறைத்தல்
- பொது (CIT) வீதத்தை 14.3 சதவீத்தால் குறைத்தல். அடுத்த மூன்று வருடங்களில் 16.7 சதவீதமாக மேலும் குறைத்தல்
- விவசாயம், மீன்பிடி, சுரங்கக் கைத்தொழில், மரவேலை போன்ற வியாபரங்கள் உள்ளடங்கலான துறைகளில் ஒன்ராறியோ உற்பத்தி மற்றும் தொழிற்பாட்டு வீதங்களை 16.7 சதவீதத்தால் குறைத்தல்
- Corporate Minimum Taxஇலிருந்து மேலும் சிறிய மற்றும் நடுத்தர பருமன்கொண்ட வியாபாரங்களுக்கு விலக்களித்தல். அத்துடன் பாரிய வியாபாரங்களின் இந்த வீதத்தை 32.5 சதவீதத்தால் குறைத்தல்.

மேலாக, சிறுவியாபார மிகைவரியை (Surtax) நீக்குவோம் - வளர்ந்துவரும் சிறு வியாபாரங்களுக்கான இந்த தடைகளுக்கு கனடாவில் முற்றுப்புள்ளி வைக்கும் ஒரேயொரு சட்ட அதிகாரம் ஒன்ராறியோவாக இருக்கும்.